OL/2023(2024)/33/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 | T | II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)**

ඉතිහාසය II
வரலாறு II
History II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

❊ பகுதி **I** இல் வினா இலக்கம் **1** கட்டாயமானது.
❊ பகுதி **II** இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
❊ எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

கிரிந்தி ஓயா, களனி கங்கை, பொம்பரிப்பு, சுகரதித்த, பராக்கிரம சமுத்திரம், விக்டோரியா நீர்த்தேக்கம், தீகவாபி, மினிப்பே அணைக்கட்டு, மாத்தறை, திசாவாவி, ஆனையிறவு, பெட்ரிக் கோட்டை (12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

பெரிய பிரித்தானியா, ஜாவா தீவு, கருங்கடல், டோக்கியோ, கல்கத்தா, இத்தாலி (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே *A*, *B*, *C*, *D* எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - இலங்கையை உள்ளடக்கிய உலகப்படத்தை உருவாக்கிய புராதன உரோம கிரேக்க இனத்தவரான புவியியலாளர் யார்?

*B* - கல்பொத்த கல்வெட்டை அமைத்த மன்னனின் பெயர் குறிப்பிடுக.

*C* - தொலைபேசியைக் கண்டுபிடித்த அமெரிக்க இனத்தவர் யார்?

*D* - சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியின் பெயரை எழுதுக. (04 புள்ளிகள்)

● *A*, *B* என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.


(ii) 1. படம் *A* இல் காட்டப்பட்டுள்ள சித்திரத்தில் காணப்படும் கருவி யாது?

2. இது எந்தப் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டது?

3. இதனைக் கண்டுபிடித்த நபர் யார்?

4. அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?

(04 புள்ளிகள்)




*A*



93970
Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

(iii) 1. உரு *B* இல் காட்டப்பட்டுள்ளவரின் பெயர் யாது?
2. அவர் இலங்கைக்கு வருவதற்கு காரணமான சர்வதேசப் பிரசித்தி பெற்ற விவாதம் எது?
3. அவருடைய வழிகாட்டலின் கீழ் தாபிக்கப்பட்ட அமைப்பு எது?
4. அவரின் தலைமையில் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் பெயரை எழுதுக.

(04 புள்ளிகள்)



*B*

## பகுதி II

**2.** (i) இலங்கைக்கு வந்து இந்நாடு பற்றிய தகவல்களை எழுதிய **மூன்று** வெளிநாட்டவரின் பெயர் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு இலக்கிய மூலாதாரத்தைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) தொல்பொருள்கள் அழிவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** மனித நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வசித்து வந்த **மூன்று** கற்குகைகளின் பெயர் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) முன்வரலாற்றுக் காலப்பகுதி மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு இடங்களின் பெயர் தருக. (04 புள்ளிகள்)

(iii) முன்வரலாற்றுக் காலப்பகுதி மனிதனின் **இரண்டு** வாழ்க்கைக் கோலப் பண்புகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக் காலப்பகுதிக் குடியிருப்புகள் முன்வரலாற்றுக் காலப் பகுதியிலிருந்து வேறுபடும் முறையினை **மூன்று** விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** (i) அனுராதபுர காலத்தில் வரண்ட வலயத்தில் கட்டப்பட்ட **மூன்று** பெருங்குளங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரண்ட வலயத்தில் பெருங்குளங்களை அமைத்ததற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) குளக்கட்டுகளை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொழினுட்பத்தை **இரண்டு** உதாரணங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) குளத்தின் முக்கிய பிரிவுகளான A - அலைதாங்கி, B - கலிங்கல் தொட்டி, C - மடைக்கதவு என்பன மூலம் இடம்பெறும் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் விளக்குக. (06 புள்ளிகள்)

**5.** (i) இந்நாட்டின் புராதன சமுதாய கட்டமைப்பில் உச்சநிலையில் இருந்த **மூன்று** பிரிவினரின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) புராதன காலத்தில் உள்நாட்டு வியாபாரம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த **இரண்டு** சட்டங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) புராதன ஆட்சியாளர்கள் சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட **இரண்டு** நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இந்நாட்டின் புராதன சமூகத்தில் பெண்கள் மதிப்பும் மரியாதைக்குமுரிய நிலைமையினைப் பெற்றிருந்தனர் என்பதை **மூன்று** உதாரணங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

33 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)


ඉතිහාසය II
வரலாறு II
History II

1. (அ) (i) சுட்டெண் ...........................




Department of Examinations Sri Lanka

1. (அ) (ii)




இங்கே வெட்டி வேறாக்கவும்

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**6.** (i) கண்டி இராச்சியத்தின் தலைநகருக்கு இயற்கையான பாதுகாப்பு வழங்கிய
(a) நதி
(b) **இரண்டு** கணவாய் பாதைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த **நான்கு** நாயக்கர் வம்ச மன்னர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத்தின் சட்டபூர்வ ஆட்சி உரிமையை நிலைநாட்டிக் கொள்ள மேற்கொண்ட **இரண்டு** நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தின் நீதிமன்றச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தினை **மூன்று** விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**7.** (i) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் கற்ற இலங்கையர்களுக்கு திறந்துவிடப்பட்ட **மூன்று** புதிய தொழில் வாய்ப்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) பிரித்தானியர் ஆட்சிக்கு முன்னர் இந்நாட்டின் மக்கள் சமூகத்தில் பணத்தைப் பயன்படுத்தல் பரவலாக இல்லாதிருந்தமைக்கான **இரண்டு** காரணங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக இந்நாட்டின் சமூகத்தில் ஏற்பட்ட **இரண்டு** பாதகமான தாக்கங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) பிரித்தானியர் ஆட்சியினால் இந்நாட்டுக்கு ஏற்பட்ட **மூன்று** நன்மையான விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி III

**8.** (i) அமெரிக்கா கண்டத்தில் குடியேற்றங்களை அமைத்த **மூன்று** ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) (a) அமெரிக்க சுதந்திரப் போருக்கு கருப்பொருளான சுலோகம் யாது?
(b) ரஷ்ய புரட்சிக்குக் கருப்பொருளான சுலோகம் யாது? (04 புள்ளிகள்)

(iii) அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கான **இரண்டு** காரணங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ரஷ்யப் புரட்சி தோன்றுவதற்கான **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

**9.** (i) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஆரம்பமான **மூன்று** முக்கிய கைத்தொழில்களின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி வேறு நாடுகளை நோக்கி பரவியமையில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சியின் செல்வாக்குக் காரணமாக போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினை **இரண்டு** உதாரணங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக சமூகத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை **மூன்று** விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

❊ ❊ ❊

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

093970

OL/2023(2024)/33/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

33 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ඉතිහාසය I<br>வரலாறு I<br>History I | පැය එකයි<br>ஒரு மணித்தியாலம்<br>One hour |

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ※ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** மகாவம்ச டீகாவ என்று இனம் காணப்படும் நூல் எது?
(1) தீபவம்சம் (2) வம்சத்தப்பாகாசினி (3) நிகாய சங்கிரகய (4) ராஜாவலிய

**2.** இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட புராதன நாணயத்துக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
(1) கஹபண (2) ஸ்வஸ்திகா நாணயம்
(3) இலக்ஷ்மி நாணயம் (4) தம்பமஸ்ஸ

● பின்வரும் A, B, C, D என்ற கூற்றுகளைக் கொண்டு **3** ஆம் **4** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - சுடப்பட்ட மட்பாண்டங்கள் பயன்படுத்துதல்
B - இரும்பு பயன்படுத்துதல்
C - நாடோடி வாழ்க்கையைக் கொண்டிருத்தல்
D - நாளாந்த வேலைகளுக்கு நுணுக்கமான கல்லாயுதங்களைப் பயன்படுத்துதல்

**3.** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்புடைய கூற்றுகள்
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) C உம் D உம்

**4.** முன் வரலாற்றுக் காலத்துடன் தொடர்புடைய கூற்றுகள்
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) C உம் D உம்

**5.** புராதன கிராமத் தலைவர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட பெயர் யாது?
(1) கஹபதி (2) கமிக (3) பருமக (4) மபுருமுக

**6.** அனுராதபுரம் ஒரு நகரமாக விருத்தியடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான விடயம்
(1) சர்வதேச வர்த்தகம்
(2) நாட்டைச் சுற்றிவரச் செல்லக்கூடிய வீதித் தொகுதியமைப்பு நிலவியமை
(3) விவசாயத்துக்குச் சாதகமானதாயிருத்தல்
(4) அரச நிர்வாகத்திற்கு இலகுவானதாயிருத்தல்

**7.** இலங்கையின் மன்னர்கள் சிலரின் பெயர்கள் **நிரல் I** இலும் அவர்களுடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகள் **நிரல் II** இலும் காட்டப்பட்டுள்ளன. **நிரல் I** இற்கு அமைய **நிரல் II** இனைப் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. பண்டுகாபயன் | A - மிரிஸ்வட்டிய தாதுகோபம் கட்டுதல் |
| 2. தேவநம்பியதீசன் | B - அனுராதபுரத்தை தலைநகரமாக ஆக்குதல் |
| 3. வலகம்பா | C - திரிபிடகத்தை நூலுருவாக்குதல் |
| | D - புனித வெள்ளரசு மரக்கிளை நடுதல் |

(1) A B C (2) B D C (3) C B A (4) D A B

**8.** ரிஷிகிரி மந்திரியினால் ஆட்சி செய்யப்பட்ட பிரதேசம் எது?
(1) உரோகண தேசம் (2) வன்னி பிரதேசம் (3) தக்கிண தேசம் (4) நாகதீப

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**9.** இராசரட்டை காலத்தில் மலயரட்டை அல்லது மலைநாட்டு இராச்சியம் மிகவும் பிரசித்தி பெற்றமைக்கு அடிப்படையான காரணம் யாது?
(1) இதமான காலநிலை நிலவியமை
(2) பிரதான ஆறுகளின் ஊட்டப் பிரதேசமாக இருந்தமை
(3) ஆக்கிரமிப்பு, உள்நாட்டுப் போராட்டம் ஆகிய சந்தர்ப்பங்களில் ஆட்சியாளர்களுக்கு பாதுகாப்பான இடமாக இருந்தமை
(4) வெளிநாட்டு வர்த்தகத்துக்கான வர்த்தகப் பொருள்களை வழங்கிய பிரதேசமாக இருந்தமை

**10.** முதன்முறையாக நாட்டில் கிராமங்களின் எல்லைகளைத் தீர்மானிக்கச் செய்த மன்னன் யார்?
(1) பண்டுகாபயன் (2) தேவநம்பியதீசன் (3) கவந்தீசன் (4) வசபன்

● பின்வரும் கூற்றுகளைக் கொண்டு **11** ஆம் **12** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - வனைதல் சில்லினைப் பயன்படுத்தி மட்பாண்டங்கள் செய்தல்
B - மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு இடிதாங்கியைப் பயன்படுத்தல்
C - சீகிரியா பூங்கா உருவாக்குதல்
D - செங்குத்தாக சுவர்கள் கட்டுதல்

**11.** முன் வரலாற்றுக்கால தொழினுட்பத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுகள் யாவை?
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**12.** அனுராதபுரக்கால தொழினுட்பத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுகள் யாவை?
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**13.** முற்காலத்தில் இலங்கையில் நாணயங்களின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக அமைந்த பிரதான காரணி யாது?
(1) அளவு (2) உலோக நிறை
(3) வெளியிடப்பட்ட ஆண்டு (4) வெளியிட்ட நாடு

**14.** உள்ளூர் தண்டப்பணம் என்பது,
(1) குளங்களின் நீரைப் பயன்படுத்துவோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரி
(2) அரசுக்குச் சொந்தமான நிலத்தைப் பயிர் செய்வதற்குப் பதிலாக விவசாயிகளால் அரசுக்கு செலுத்தப்பட்ட வரி
(3) கால்வாய்களில் மீன் பிடிப்பதற்காக அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி
(4) மறைந்திருக்கும் குற்றவாளியைப் பிடிக்கும்வரை அவன் வாழ்ந்த கிராம மக்களிடமிருந்து அறவிடப்பட்ட வரி

**15.** இலங்கை மன்னர்களின் பெயர்கள் **நிரல் I** இலும் அவர்களின் இராசதானிகள் **நிரல் II** இலும் குறிப்பிடப்பட்டுள்ளன. **நிரல் I** இற்கு அமைய ஒழுங்குமுறையில் **நிரல் II** இனைப் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. முதலாம் விஜயபாகு | A - அனுராதபுரம் |
| 2. இரண்டாம் பராக்கிரமபாகு | B - பொலன்னறுவை |
| 3. துட்டகைமுனு | C - தம்பதெனிய |
| | D - கண்டி |

(1) A C B (2) A D B (3) B C A (4) B D C

**16.** முதலாம் விஜயபாகு மன்னனின் சேவையை மதிப்பிடுகையில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய விடயம் எது?
(1) திருமண உறவுகள் மூலம் அண்டை நாடுகளுடன் தொடர்பைக் கட்டியெழுப்புதல்
(2) வீழ்ச்சியடைந்திருந்த நீர்ப்பாசனத்தை சீர்திருத்தி அமைத்தல்
(3) வெளிநாட்டு ஆட்சியிலிருந்து இந்நாட்டை விடுவித்து நாட்டை ஒன்றிணைத்தல்
(4) அழிவடைந்திருந்த விகாரைகளைப் புனரமைப்புச் செய்தல்

**17.** கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் எந்த நகரின் உரிமையைப் பெறுவதற்காகப் போர் புரிந்தனர்?
(1) ஜெருசலம் (2) கொன்ஸ்தாந்திநோப்பிள்
(3) உரோம் (4) வெனிஸ்

**18.** பின்வரும் A, B என்ற கூற்றுகளைக் கொண்டு விடை தருக.
A - ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் தோன்றுதல்
B - பணப் புழக்கம் அதிகரித்தல்
ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பில்
(1) A உம் B உம் உண்மையானவை. (2) A உம் B உம் பொய்யானவை.
(3) A உண்மையானது என்பதுடன் B பொய்யானது. (4) A பொய்யானது என்பதுடன் B உண்மையானது.

[பக். 3 ஐப் பார்க்க



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

- A தொடக்கம் D வரையான கூற்றுகளைக் கொண்டு **19** ஆம் **20** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
  A - திகிரி இளவரசனால் முல்லேரியாவில் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்படுதல்
  B - போர்த்துக்கேயரினால் குசுமாசன தேவி அரசியாகப் பெயரிடப்படுதல்
  C - மாயாதுன்னை முதல் ஆட்சியாளன் ஆகுதல்
  D - மகா ஆஸ்தான இளவரசனால் ரந்தனிவெலவில் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்படுதல்

**19.** சீதவாக்கை இராசதானியுடன் தொடர்புடைய **இரண்டு** சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**20.** கண்டி இராச்சியத்துடன் தொடர்புடைய **இரண்டு** சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**21.** விவசாயத்தில் வரிசையாக பயிரிடும் முறை மூலம் ஏற்படும் நன்மை
(1) பயிர் நிலங்களில் ஏற்படும் களைகள் அளவு குறைவடைதல்
(2) பயிர்களுக்கு உரம் இடுதல் இலகுவாதல்
(3) பயிர்களுக்கு ஏற்படும் நோய்கள் பரவுதல் இழிவளவாகுதல்
(4) விதைப்பதற்குத் தேவையான விதைகளின் அளவைக் குறைப்பதற்கு முடியுமாதல்

**22.** 1818 சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணம்
(1) ஏழு கோரளை ஊடாக கண்டி இராச்சியத்துக்கு இராணுவத்தையும் ஆயுதங்களையும் அனுப்புவதற்கு ஆங்கிலேயருக்கு இயலுமாயிருந்தமை
(2) சாதாரண மக்களின் ஒத்துழைப்பு கிடைக்காதிருந்தமை
(3) கம்சபா முறையை ஒழித்ததினால் மக்களை ஒன்றிணைப்பதிலான இடர்பாடு
(4) அரசனாக குறிப்பிடப்பட்ட நபர் அரசுரிமை இல்லாதவரென்பது வெளிப்பட்டமை

**23.** பின்வரும் அட்டவணையில் **நிரல் I** இல் பிரித்தானியர் இலங்கையில் ஆதிக்கத்தை நிலைநாட்டிய போது முக்கியத்துவம் பெற்ற ஆண்டுகளும் **நிரல் II** இல் அந்த ஆண்டுகளின் நிகழ்வுகளும் காட்டப்பட்டுள்ளன. **நிரல் I** இற்கு அமைய **நிரல் II** இனைப் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. 1796 | A - கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்படுதல் |
| 2. 1802 | B - கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஆதிக்கத்தை நிலை நிறுத்துதல் |
| 3. 1815 | C - இரட்டை ஆட்சி ஆரம்பமாகுதல் |
| | D - கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் ஆட்சிக்குள் கொண்டு வரப்படுதல் |

(1) A C B (2) B A D (3) C A B (4) D B C

**24.** வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாலயம் தாபிக்கப்படுவதற்கு முன்னோடியாக விளங்கியவர் யார்?
(1) ஆறுமுகநாவலர் (2) பொன்னம்பலம் இராமநாதன்
(3) பொன்னம்பலம் அருணாசலம் (4) நடேச ஐயர்

**25.** இலங்கையில் பல்வேறு இனங்களுக்கும் உரிய நபர்கள் நாட்டின் நன்மைக்காக இனம், மதம் என்ற வேறுபாடின்றி செயற்பட்ட விதத்தை மிக நன்றாக வெளிப்படுத்தும் அமைப்பு எது?
(1) யாழ்ப்பாணச் சங்கம் (2) தாழ்நில பெருந்தோட்டக்காரர் சங்கம்
(3) இலங்கை தேசிய காங்கிரஸ் (4) சிலாபம் சங்கம்

**26.** அனுராதபுரத்தில் பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்த நபர்
(1) அநகாரிக தர்மபாலா (2) பியதாச சிரிசேன
(3) வலிசிங்க ஹரிச்சந்திர (4) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

- பிரித்தானியர் இந்நாட்டுக்கு அறிமுகம் செய்த அரசியல் யாப்பு சீர்திருத்தங்களின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு **27** ஆம் **28** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - பிரதம மந்திரி
B - நிர்வாகக் குழு முறைமை
C - பாராளுமன்றம்
D - சட்டவாக்கக் கழகம்
E - மாகாணப் பிரதிநிதித்துவம்

**27.** டொனமூர் சீர்திருத்தம் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அம்சம் எது?
(1) A (2) B (3) C (4) D

**28.** சோல்பரி சீர்திருத்தம் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அம்சங்கள் மாத்திரம் அடங்கிய விடை எது?
(1) A உம் C உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) B உம் E உம்

**29.** ஐரோப்பியரால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பெருந்தோட்டப் பயிர்கள் ஆவன
(1) சிங்கோனா, கொக்கோ, தேயிலை, இறப்பர் (2) கோப்பி, கறுவா, தேயிலை, இறப்பர்
(3) கோப்பி, கொக்கோ, தேயிலை, தென்னை (4) கோப்பி, தேயிலை, இறப்பர், தென்னை

**30.** இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கு அமைந்துள்ளது?
(1) லுணுவில (2) அகலவத்தை (3) தலவாக்கலை (4) மாத்தளை

**31.** எந்த அரசியல் யாப்பின்கீழ் இலங்கை முதன்முறையாக ஒன்றுபட்ட குடியரசாக ஆக்கப்பட்டது?
(1) டொனமூர் (2) சோல்பரி (3) 1972 (4) 1978

**32.** நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அதிகளவில் பங்களிப்பு வழங்கும் ஆறு எது?
(1) மகாவலி (2) களனி (3) களு (4) வளவை

**33.** தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தொடர்பாக நேரடியாக மக்கள் கருத்தைப் பெறக்கூடிய முறை எது?
(1) மாகாண சபைத் தேர்தல் (2) பாராளுமன்றத் தேர்தல்
(3) சனாதிபதித் தேர்தல் (4) பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

**34.** முதலாம் உலக மகா யுத்தத்தில் ஜெர்மனி உள்ளிட்ட மத்திய வல்லரசுகளின் அணி தோல்வியடைவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணியாக அமைந்தது
(1) நட்பு நாடுகளுடன் ஐக்கிய அமெரிக்க அரசுகள் இணைந்து கொண்டமை
(2) மத்திய வல்லரசு நாடுகளின் பக்கம் இருந்த இத்தாலி நட்பு நாடுகளுடன் இணைந்து கொண்டமை
(3) பிரித்தானியாவிடம் வலுவான கடற்படைப் பலம் இருந்தமை
(4) ஜெர்மன் கடற்படை தமது பேரரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தமை

**35.** ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து அங்கத்துவ நாடுகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அமைப்பு எது?
(1) நம்பிக்கைப் பொறுப்புச் சபை (2) சர்வதேச நீதிமன்றம்
(3) பொதுச்சபை (4) சமூக பொருளாதார சபை

**36.** முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் வேர்சேல்ஸ் ஒப்பந்தம் மூலம் கடுந்தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட நாடு எது?
(1) பிரான்ஸ் (2) இத்தாலி (3) ஜெர்மனி (4) ரஷ்யா

**37.** பின்வரும் A, B, C என்பதில் தரப்பட்டுள்ள அமைப்புகள் அவை தாபிக்கப்பட்ட காலத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தும்போது சரியான ஒழுங்குமுறை கொண்ட விடை எது?
A - ஐக்கிய நாடுகள் சபை
B - அணி சேரா இயக்கம்
C - சர்வதேச சங்கம்
(1) A B C (2) B C A (3) C A B (4) C B A

- பின்வரும் A, B, C, D என்பதில் சோடிக் கூற்றுகள் தரப்பட்டுள்ளன. இதில் முதலாம் இரண்டாம் கூற்றுகளுக்கிடையிலான தொடர்பை பரிசீலித்து **38** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - 1. முடியரசு முறை
2. பிரான்சிய புரட்சி

B - 1. ரஷ்யப் புரட்சி
2. சமவுடைமைக் கொள்கை

C - 1. ஸ்டேட்ஸ் ஜெனரல் சபை
2. ரஷ்யப் புரட்சி

D - 1. அமெரிக்க புரட்சி
2. பொஸ்ரன் தேநீர் விருந்து

**38.** இரண்டாவதின் வெற்றியுடன் முதலாவது வீழ்ச்சியடைந்ததைக் காட்டும் சோடிகூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

**39.** முதலாவதுக்கும் மற்றும் இரண்டாவதுக்கும் இடையில் தொடர்பைக் **காட்டாத** சோடிக்கூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

**40.** முதலாவதின் விளைவாக இரண்டாவது பரவியது எனக் காட்டும் சோடிக்கூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

***



Department of Examinations Sri Lanka